**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

<u>அசல் வழக்கு எண். 148/2014</u>

நாள் 15.07.2022

<u>பெயர். சரவணன் த/பெ. பூங்காவனம்</u>

<u>வா.சா.2 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து எந்த அழைப்பாணை வரவில்லை என்றால் சரியல்ல. வாதி அவரது நிலத்திற்கு வழி வேண்டும் என்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி ரசீம்காந், ரவிந்காந் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண்.282/5ல் விஸ்தீரணம் 60 சென்ட், 282/7, 97 சென்ட்ம் 282/8 ஆகும். சர்வே எண் 282/8ல் எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியவில்லை, ஐக்பந்தியும் எனக்கு தெரியாது. லிங்கப்ப நாயுடு என்பவர் வாதியின் தந்தை என்றால் சரிதான். லிங்கப்ப நாயுடு பிரதிவாதிகளுக்கு ஒரு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 மேற்படி பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 கிரய பத்திரம் எழுதும்போது வாதி அவருடைய தந்தையுடன் தான் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் கையொப்பம் பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தந்தை வா.சா.ஆ.7 கிரய பத்திரத்தின்படி ஒரு ஏக்கரா 39 சென்ட் 3 சர்வே எண்களில் பிரதிவரிதிகளுக்.கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஒரு ஏக்கரா 39 சென்ட்டும் பிரதிவாதிகள் தீர்வை செலுத்தி பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண உறுதி கூற்றை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது நிரூபண உறுதி கூற்றில் உள்ள வரைபடத்தை வாதி இந்நீதிமன்றத்தில் அனுமதி வாங்கி என்னிடம் காண்பித்தாரா என்றால் காண்பித்தார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவரைபடத்தை என்னிடம் வாதி காண்பித்தாரா என்றால் அதை காண்பிக்கவில்லை வாதியிடம் இருந்த நகல் வரைபடத்தை என்னிடம் காண்பித்தார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தின் விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். வாதி ஊரில் இல்லாத போது பிரதிவாதிகள் நிலத்தை அளந்து எடுத்து கொண்டார்கள் என்பதை

நான் நேரில் பார்த்தேனா என்றால் நேரில் பார்த்தேன். எந்த பிரதிவாதிகள் நிலத்தை அளந்தார்கள் என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வாதிக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.